**DEPOSITION OF WITNESS**

| | | |
|---|---|---|
| IN THE COURT OF | : | Judicial Magistrate, Thuraiyur. |
| Case No. | : | CC. 77 of 2020 |
| Prosecution Witness | : | PW7 |

26.02.2026

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | முத்துசாமி | Calling | : | உதவி ஆய்வாளர் (ஓய்வு) |
| Father Name | : | சின்னப்பன் | Religion | : | |
| Village | : | தத்தனூர் | Age | : | 61 |
| Taluk | : | உடையார்பாளையம் | | | |

**சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.**

எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் புலிவலம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். நான் கடந்த 14.10.2019 அன்று 16.00 மணிக்கு புலிவலம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பொருப்பில் இருந்தபோது திருச்சி அரசு மருத்துவமனையில் இருந்து வரப்பெற்ற தகவலை பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த மூக்கையா என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று நிலைய குற்ற எண் 92/2019 சட்டப்பிரிவுகள் 294(பி),324,506(2) இதச படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**.

2. பின்னர் அன்றைய தினமே 17.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் கலையரசன், விஜயராகவன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **வரைபடம் அ.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**

3. பின்னர் சாட்சிகள் 1 முதல் 6 வரையான சாட்சிகளை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். வழக்கின் சம்பவம் உண்மையென தெரியவந்ததன் பேரில் இவ்வழக்கின் எதிரியை தேடியபோது 23.10.2019 ம் தேதி காலை 10 மணியளவில் மண்பறை கிராமம் ஒட்டர் தெருவில் எதிரி பிரபாகரன் வீட்டின் முன்பு அவரை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு

அனுப்பி வைத்தேன். பின்னர் அ.சா.1 க்கு கிசிச்சை அளித்த துறையூர் அரசு மருத்துவமனையின் மருத்துவர் வசுமதி அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்றிதழ் பெற்றேன். இத்துடன் எனது விசாரணை முடித்து எதிரி மீது சட்டப்பிரிவுகள் 294(பி),324,506(2) இதச படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

14.10.2019 ம் தேதி 16.00 மணிக்கு காவல் நிலையத்தில் இருந்தேன். சம்பவம் பற்றி காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 14.10.2019 ம் தேதி 16.00 மணி. புலிவலம் காவல் நிலையத்தில் இருந்து திருச்சி அரசு மருத்துவமனைக்கு சுமார் 25 கி.மீ தூரம் இருக்கும். நான் மருத்துவமனைக்கு பேருந்தில் சென்றேன். மேற்படி மருத்துவமனைக்கு காவல் நிலையத்தில் இருந்து செல்ல 1-1/4 மணி நேரம் ஆகும் என்றால் அரை மணி நேரத்தில் சென்றுவிடலாம். நான் வழக்கிற்காக நேரத்தை குறைத்து சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் மருத்துவமனையில் இருந்து 16.00 மணிக்கு காவல் நிலையம் வந்தேன். எனக்கு தகவல் 16.00 மணிக்கு கிடைத்தது என்றும், 16.00 மணிக்கு வாக்குமூலம் வாங்கிவிட்டு காவல் நிலையம் வந்ததாக தவறாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட தேதி 14.10.2019. மேற்படி தேதியில் முதல் தகவல் அறிக்கை அனுப்பவில்லை என்றும், 18.10.2019 அன்று தான் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். சாட்சிகளை 17.00 மணிக்கு விசாரணை செய்தேன். நான் மேற்படி நேரத்தில் சாட்சிகளை சம்பவ இடத்தில் விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி சாட்சிகளை விசாரணை செய்யும்போது கணினி எடுத்து செல்லவில்லை. சாட்சிகள் அ.சா.1 ன் உறவினர்கள் என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு அருகில் உள்ளவர்களை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. மேற்படி தேதியில் எதிரிக்கு காயம் ஏற்பட்டு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார் என்றால் ஞாபகம் இல்லை. குற்ற இறுதி அறிக்கையில்

எதிரியின் Discharge Summary நகலை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எதிரி 14.10.2019 முதல் 21.10.2019 வரை உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தார் என்றால் சரிதான். எதிரி வீட்டிற்கு வந்தபின்பு தான் அவரை கைது செய்தேன். எதிரியின் காயம் குறித்து எதிரியிடம் வாக்குமூலம் வாங்காமல் அ.சா.1 யிடம் மட்டும் வாக்குமூலம் வாங்கி எதிரி மீது தவறாக வழக்கு பதிவு செய்தேன் என்றால் சரியல்ல. அ.சா.1 புகார் வாக்குமூலம் அளிக்கவில்லை என்றும், எதிரி புகார் கொடுத்துவிடுவார் என்பதற்காக அ.சா.1 ஐ வழக்கில் இருந்து தப்பிக்க வைப்பதற்காக புகார் தயார் செய்து எதிரி மீது வழக்கு பதிவு செய்தேன் என்றால் சரியல்ல. எதிரி அ.சா.1 ஐ தன்னிச்சையாக தாக்கவில்லை என்றும், அ.சா.1 தான் எதிரியை தாக்கி காயப்படுத்தினார் என்றால் சரியல்ல. எதிரிக்கும், வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. வழக்கிற்காக ஆவணங்கள் தயார் செய்தேன் என்றால் சரியல்ல. எதிரி பயன்படுத்தியதாக சொல்லப்படும் கத்தி கைப்பற்றப்படவில்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒப்பம்/-அ.நர்மதாராணி,
நீதித்துறை நடுவர், துறையூர்